கடலோர மீனவர்களுக்கு என்று ஒதுக்கப்படுகிற நிலைமை ஏற்படலாம். இப்பொழுது அந்த நிலைமைகள் இல்லாத காரணத்தால்தான் முன்னுரிமை கடலோரப் பகுதி மீனவர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டு வருகிறது.

ஸ்கூட்டர்களுக்கான வரிவிதிப்பு.

*வினா எண். 1081—திரு. கா. கோபால கிருஷ்ணன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஸ்கூட்டர்களுக்கு மற்ற அண்டை மாநிலங்களை விட வரி விதிப்பு அதிகமாயிருப்பதால் குறைக்க அரசிற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்களிலே ஸ்கூட்டர், கார் முதலியவற்றிற்கு வரி குறைவாக இருப்பதால் ஸ்கூட்டர் விலை ரூ. 1,000 குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது, ஆதலால் ஸ்கூட்டர்களுக்கு மற்றும் கார்களுக்கு அண்டை மாநிலங்களில உள்ள தப்போல் வரியைக் குறைக்கும் நிலையில் மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் ஸ்கூட்டரைப் பற்றித்தான் இருக்கிறது. ஆனல், தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா பொருள்களின் வரி என்ன என்பதை என்னால் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியாது. மூலக் கேள்வியைப் பற்றி மட்டும்தான் சொல்ல முடியும். ஸ்கூட்டரைப் பற்றி சொல்ல வேண்டுமானால் ஸ்கூட்டருக்கு நம்முடைய மாநிலத்தில் 15% விற்பனை வரி போடுகிறோம். கர்நாடக மாநிலத்தில் 15% போடுகிறார்கள், அதுதான் அண்டை மாநிலம், பக்கத்து மாநிலம். கேரள மாநிலத்திலே 15% போடுகிறார்கள். ஆந்திராவில் 12% மகாரஷ்டிராவில் 12%, ஒரிசாவில் 13%, பாண்டிச்சேரியில் 7%. நாம் வரி போடுகிறபொழுது, மற்ற மாநிலங்களிலே வரி குறைவாக இருந்தால், எவ்வளவு வரி நஷ்டமாகும் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் வரி போடப்படுகிறது. இப்பொழுது பாண்டிச்சேரியிலே 7% இருந்தாலும், அது நம்முடைய மாநிலத்தைப் பாதிக்கவில்லையென்று, கணக்குப் பார்க்கும்போது நமக்குத் தெரிகிறது. கர்நாடகம் ஆந்திரம், கேரளத்தைப் பார்க்கும்போது, அதிகமான வரியென்று கூறுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்றால், ஸ்கூட்டரைப் பொறுத்த வரைக்கும் அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லையென்றுதான் நாம் 15% போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-50]

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு வரவேண்டிய வரி, அடுத்த மாநிலங்களில் ஸ்கூட்டர் வாங்குவதனால் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட வாகனங்களை மீண்டும் நமது மாநிலத்திலே பதிவு செய்யும்போது அந்த வரி இழப்பை வசூலிக்க முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற கணக்குப்படி ஸ்கூட்டருக்கு 15 சதவிகிதம் ஒருமுனை வரி இருப்பதால், வேறு இழப்பு இல்லை என்று கணக்கு இருக்கிறது. வேண்டுமானால் மீண்டும் இதை ஆராய்ந்து இதனால் வரி நஷ்டம் வரும் என்றால் மறுபரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது.

சிதம்பரம் காட்டுமன்னார்கோயில் தாலுக்காக்களை இணைத்து தனி வருவாய் கோட்டமாக்கும் திட்டம்.

*வினா எண். 1042 திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் காட்டுமன்னார் கோயில், கடலூர், பண்ருட்டி ஆகிய நான்கு தாலூக்காக்கள் கொண்ட வருவாய்த்துறை டிவிஷனில் உள்ள சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் ஆகிய இரண்டு தாலுக்காக்களையும் தனியாகப் பிரித்து ஒரு சப்-டிவிஷனாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: உள்ளது.

திரு. வி.வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் ஏற்கனவே வருவாய்க் கோட்ட அலுவலகக் கட்டடமும் வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு வீடும், தாசில்தாருக்கு வீடும் இருக்கின்றன மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் ஆய்வாளர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்தான் திறந்து வைத்தார்கள். ஆகவே சிதம்பரம் தாலூகாவையும், காட்டுமன்னார் கோவில் தாலூகாவையும் தனியாகப் பிரித்து, சிதம்பரத்திலே ஒரு வருவாய்க்கோட்ட அலுவலகமும் காட்டுமன்னார் கோவிலில் ஒரு வருவாய்க் கோட்ட அலுவலகமும், தனியாக அமைப்பதற்கு இந்த நிதி ஆண்டிலேயே அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், விருத்தாசலம், திருக்கோவிலூர், திண்டிவனம் ஆகிய 4 கோட்டங்கள் இருக்கின்றன. சிதம்பரம் கோட்டத்தைப் பொறுத்த வரையில் சிதம்பரம், கடலூர், பண்ருட்டி ஆகிய 3 தாலூகாக்கள்தான் முன்னாலே இருந்தன. இப்போது காட்டுமன்னார் கோவில் தாலூகா சென்ற ஆண்டு ஏற்பட்டது. ஆனால் 3-3-1981 வரையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுத்து முடிக்கும் வரையில் புதிதாக எந்தவிதமான நிர்வாக மாற்றமும் செய்யக் கூடாது என்ற மத்திய அரசின் ஆணைக் கேற்ப இதைச் செய்யவில்லை. ஆனால் அதற்குப் பிறகு 5-5-1981 அன்று வருவாய்த்துறைஅமைச்சருடைய தலைமையில், வருவாய் ஆணையர், வருவாய்த் துறை செயலாளர், நிதித் துறை செயலாளர் ஆகியோரை வைத்து, சிதம்பரம் கோட்டம் மிகப்பெரிய கோட்டமாக இருக்கின்ற காரணத்தால், அதை இரண்டாகப் பிரிக்க அரசு வேண்டிய ஆணையை இட்டிருக்கிறது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.